கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன தீர்ப்பாயம்,

பெரியகுளம்.

வழக்கு எண் MCOP. No. 4/2023 நாள்: 03.08.2026

எ.ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முனிஸ்வரன் | ஊர் | : வாசுதேவநல்லூர் |
| தந்தை பெயர் | : செல்லத்துரை | தாலுகா | : சிவகிரி, தென்காசி மாவட்டம். |
| தொழில் | : தட்டச்சர், வட்டார போக்குவரத்து அலுவலகம், தேனி. | வயது | : 26/2026 |

ஆணையுறுதி சட்டப்படி சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். 1908 ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் 1 வது சாட்சியின் முதல் விசாரணை**

நான் தேனி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சாட்சியம் அளிக்க அதிகாரம் வழங்கி வட்டார போக்குவரத்து அலுவலர் எனக்கு வழங்கிய கடிதம் அசல் **எ.ம.சா.ஆ. 1** ஆகும். TN 60 AH 5343 என்ற வாகனம் விபத்து சமயத்தில் ஸ்ரீ ராம் ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டதற்கான ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். 22.02.2021 ஆம் தேதி முதல் 21.02.2022 ஆம் வரை மூன்றாம் நபருக்கான காப்பீடு நிலுவையில் இருந்தது. அது **எ.ம.சா.ஆ. 2** ஆகும்.

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

07.09.2022 ஆம் தேதி விபத்து சமயத்தில் விபத்து ஏற்படுத்திய வாகனம் TN 60 AH 5343 என்ற வாகனம் எந்த காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் Generali central insurance company limited நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR Digitally signed by SANKAR Date: 2026.08.03 09:56:30 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.